IN THE COURT OF THE ADDITIONAL DISTRICT JUDGE
(FAST TRACK COURT), VELLORE, VELLORE DISTRICT.

DEPOSITION OF WITNESS

OS.NO.12/2019

P.W.1-NETHAJI

DATE:25.02.2021

குறுக்கு விசாரணை தொடர்ச்சி.

காவல் நிலையத்தில் நான் புகார் கொடுத்தேனா என்றால் என் தாய், தகப்பனார் கொடுத்தார்கள். யார் பெயரில் புகார் கொடுத்தார்கள் என்றால் என் தங்கையின் மீதும் என் தங்கையின் கணவர் மீதும் புகார் கொடுத்தார்கள். அந்த புகாரின் மீது விசாரித்தார்களா என்றால் விசாரிக்கவில்லை. என் தாயார் காவல் நிலையத்திற்கு செல்லவும் புகார் கொடுக்கவும் இல்லை என்றால் போஸ்ட் ஆபிஸ் மூலமாக புகாரை அனுப்பினோம். சாட்சி மீண்டும் கூறுகிறார் தாலுக்கா அலுவலகம் அருகிலுள்ள காவல் நிலையத்தில் புகாரை கொடுத்துவிட்டு அதற்கு பின்னர் தான் போஸ்டில் புகார் அனுப்பினோம். வா.சா.ஆ.19 என் தாயாருடைய கையெழுத்தை என் தகப்பனார் போட்டு நானும் என் தகப்பனாரும் கூட்டாக சேர்ந்து தயார் செய்த ஆவணம் என்று சொன்னால் இல்லை. வா.சா.ஆ.20 மற்றும் 21 ஆவணங்களிலும் காணப்படும் கையொப்பங்கள் என் தாயாருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.22 முகவர் அதிகாரம் வழங்கப்பட்ட பத்திரத்தில் உள்ள கையொப்பமும் என் தாயாருடையது அல்ல என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.1 என் தாயார் கிரையம் பெற்ற பத்திரம் என்று சொன்னால் சரிதான். இந்த பத்திரத்தில் என் தகப்பனார் பணம் கொடுத்ததாக விவரம் காணப்படுகிறதா என்றால் காணப்படுகிறது. அந்த ஆவணத்தினை நான் படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன். என் தந்தையார் பணம் கொடுத்தாக வா.சா.ஆ.1ல் விவரம் காணப்படவில்லை என்றால் தவறு. விவரம் காணப்படுகிறது. 'எழுதி வாங்குபவர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட' என்று தான் விவரம் காணப்படுகிறது என்று சொன்னால் சரிதான். இந்த 'எழுதி வாங்குபவர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட' என்ற வாசகங்கள் ஆவணம் எழுதப்பட்டதற்கு பின்னிட்டு எங்களால் எழுதப்பட்டிருக்கிறது

என்று சொன்னால் பத்திரம் பதிவு மேற்கொள்ளப்பட்ட போதே எழுதப்பட்டிருந்த விவரம் தான். இந்த சொத்து என் தாயாருடைய தனிப்பட்ட சொத்து, இதில் எனக்கோ, என் தகப்பனாருக்கோ எந்த உரிமையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. ஒரு வாதத்திற்காக என் தகப்பனாரால் பணம் கொடுக்கப்பட்டு என் தாயார் பெயரில் ஏற்பட்ட ஆவணமாக இருந்தாலும் தாயாரின் நலனுக்காக வாங்கப்பட்ட சொத்தாக கருதப்படும், ஆகவே அதில் என் தகப்பனாருக்கோ, எனக்கோ எந்தவித பாக்கியதையும் இல்லை என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.2 எனது தாயார் எல்.ஐ.சி. நிறுவனத்தில் கடன் பெற்ற ஆவணம் என்றால் சரிதான். வா.சா.ஆ.11 என் தாயார் பெயரில் தான் காணப்படுகிறது என்றால் சரிதான். வா.சா.ஆ.15 மற்றும் 16 எங்களால் வழக்கிற்காக வேண்டி தயார் செய்யப்பட்ட ஆவணம் என்று சொன்னால் சரியல்ல. வா.சா.ஆ.18யினை எனது தகப்பனார் தான் அதற்கான சான்றிட்ட நகலையும் பெற்றிருக்கிறார் மற்றும் அவர்தான் பத்திரத்தையும் தனது பெயரில் வாங்கியிருக்கிறார் என்று சொன்னால் என் தாயார் சொன்னதின் பேரில் என் தகப்பனார் வாங்கியிருக்கிறார். போலிசார் நாங்கள் கொடுத்த புகார் பொய் என்ற காரணத்தினால் தான் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் பிரதிவாதி போலிசாக இருக்கின்ற காரணத்தினால் அவருடைய அதிகாரத்தை பயன்படுத்தி நடவடிக்கை எடுக்காமல் செய்துவிட்டார். என் தாயார் நான் எழுதிக்கொடுத்தது உண்மை தான் என்று போலிசாரிடம் தெரிவித்த காரணத்தினால் போலிசார் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்று சொன்னால் போலிசார் என் தாயாரை விசாரிக்கவும் இல்லை, அவர் தான் எழுதிக்கொடுத்ததாக சொல்லவும் இல்லை. நான் கே.வி.குப்பம் சார்பதிவாளர் பெயரில் புகார் ஏதேனும் கொடுத்திருக்கிறேனா என்றால் கொடுத்திருக்கிறேன். எந்த தேதியில் புகார் கொடுக்கப்பட்டது என்றால் ஞாபகமில்லை. புகார் நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்டிருக்கிறதா என்றால் நான் கொடுத்தது போல் எனக்கு ஞாபகம் இருக்கிறது. நான் அதுபோல எந்த புகாரும் கொடுக்காத காரணத்தினால் தான் நீதிமன்றத்தில் அதற்கான ஆதாரத்தை தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால் நான் புகார் கொடுத்திருக்கிறேன். எனது தாயாரை

கே.வி.குப்பம் சார்பதிவாளர் விசாரணை செய்து என் தாயார் தன்னிச்சையாகத்தான் அந்த ஆவணத்தை எழுதிக்கொடுத்ததாக தெரிவித்த காரணத்தினால் தான் அந்த ஆவணம் பதிவு செய்யப்பட்டது என்று சொன்னால் அது பொய். என் தாயார் தற்போது என் தகப்பனாருடன் இருக்கிறாரா என்றால் இருவரும் ஒரே வீட்டில் தான் இருக்கிறார்கள். நான் தனியாக இருக்கிறேன். சென்ற வாய்தாவிலும் என் தகப்பனார் என்னுடன் வந்தார், இன்றைக்கும் என் தகப்பனார் என்னுடன் வந்திருக்கிறார். என் தாயார் அடிக்கடி பிரதிவாதியை போனில் தொடர்பு கொண்டு நானும் என் தகப்பனாரும் அவரை வீட்டை விட்டு வெளியே செல்ல இயலாமல் வீட்டில் அடைத்து வைத்திருக்கிறோம் என்று தெரிவிக்கிறார் என்று சொன்னால் இல்லை. என்னுடைய தாயார் பிரதிவாதியிடம் தான் எந்த ஆவணமும் என்னுடைய பெயருக்கு எழுதிக்கொடுக்கவில்லை என்றும் இந்த வழக்கினை என் தாயார் தாக்கல் செய்யவில்லை என்றும் தெரிவித்துள்ளார் என்று சொன்னால் என் தாயார் சொல்லித்தான் இந்த வழக்கு போடப்பட்டது. தன்னால் நீதிமன்றத்திற்கு வரஇயலவில்லை என்பதால் தான் என்னை முகவராக நியமித்திருக்கிறார். என்னை என் தாயார் முகவராக நியமதித்துக்கொள்ளவில்லை அவர் நல்ல திடத்துடனும் மனத்துடனும் இருக்கிறார் என்று சொன்னால் என் தாயாருக்கு உடல்நிலை சரியில்லை. இப்போது கூட வைத்தியம் செய்துக்கொண்டிருக்கிறார். என்னுடைய தாயார் தன்னிச்சையாக தன்னுடைய ஒரே மகள் மீது உள்ள அன்பு பாசத்தினால் தான் தனக்கு சொந்தமான சொத்தினை செட்டில்மன்ட் செய்து கொடுத்திருக்கிறார் என்று சொன்னால் அது பொய். அந்த ஆவணம் உண்மையான ஆவணம், அது நடைமுறைக்கு வந்துவிட்ட ஆவணம் என்று சொன்னால் அது பொய். சாட்சி தாமே கூறுகிறார் அந்த ஆவணம் என் தாயாரை அடித்து மிரட்டி வாங்கிய ஆவணம். என் தாயாரை அடித்து மிரட்டி வாங்கிய ஆவணம் அல்ல, அவர் தன்னிச்சையாக எழுதிக்கொடுத்த ஆவணம் தான் என்று சொன்னால் சரியல்ல. எனக்கு அரும்பாக்கத்தில் இடம் உள்ளதா என்றால் என் தகப்பனார் என் பெயருக்கு எழுதி வைத்தார். அது குடும்ப சொத்து, என் தகப்பனார் என் பெயருக்கு எழுதி

வைத்திருக்கிறார் என்று சொன்னால் அது எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் ஆவணத்தில் என் தகப்பனார் என் பெயருக்கு சொத்து எழுதி வைத்ததாக விவரம் காணப்படுகிறது. அது பி.சா.ஆ.2ஆக குறியிடப்படுகிறது. இந்த பி.சா.ஆ.2ல் தனக்கு பிதுராஜ்ஜியமாக பாத்தியப்பட்ட சொத்தை எழுதி வைத்துள்ளதாக விவரம் காணப்படுகிறது என்றால் இந்த வழக்கிற்கும், அந்த சொத்துக்கும் எந்த சம்பந்தமும் இல்லை. என்னுடைய தகப்பனார் என் பெயரிலும் என் மனைவி பெயரிலும் என்னுடைய மாமியார் பெயரிலும் அபிமானத்தின் பெயரில் சொத்துக்களை எழுதிவைத்துவிட்டார், இருக்கின்ற ஒரு சொத்தையாவது காப்பாற்ற வேண்டும் என்ற நோக்கத்தில் தான் என்னுடைய தாயார் தன்னுடைய மகள் பெயரிலும் தானா செட்டில்மன்ட் பத்திரம் எழுதிவைத்திருக்கிறார் என்று சொன்னால் இந்த வழக்கிற்கும் அந்த சொத்துக்களுக்கும் எந்தவிதமான சம்பந்தமும் கிடையாது. இந்த வழக்கினை தாக்கல் செய்தவற்கும் இந்த வழக்கில் சாட்சியம் அளிப்பதற்கும் எனக்கு எந்தவிதமான அருகதையும் கிடையாது என்று சொன்னால் நான் என் தாயாருடைய நலனுக்காக, என் தாயார் வழக்கு போட்ட காரணத்திற்காக சாட்சியம் அளிக்கிறேன். என்னுடைய முதல் விசாரணையில் பிரமாண வாக்குமூலத்தில் கூறப்பட்டுள்ள விவரங்கள் உண்மைக்கு புறம்பானவை என்று சொன்னால் சரியல்ல. இந்த வழக்கு தள்ளுபடிக்கு உகந்தது என்று சொன்னால் சரியல்ல.